| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
|---|---|
| திகதி | 2022 யூன் 28 |

## 2021இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான இணங்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் நிருவாக ரீதியான தண்டப் பணங்களை விதித்தல்/ சேகரித்தல்

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 19(1)இன் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் படி, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்களின் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. தண்டப்பணங்கள் நிதியியல் நிறுவனங்களின் இணங்கியொழுகாத தன்மைகள் பற்றிய இயல்பு மற்றும் அதன் பாரதூரமான தன்மை என்பனவற்றினை பரிசீலனையில் கொண்டு விரித்துரைக்கப்படுகிறது.

இதற்கமைய, பணம் தூயதாக்கலைத் தடை செய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவிப்புக்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் 2021 ஒத்தோபர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் கீழேயுள்ளவாறு ரூ.1.5 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையினைத் தண்டப்பணமாக திரட்டியிருக்கிறது. தண்டப்பணமாக திரட்டப்பட்ட நிதித் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

**1. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி**

**விதிப்புத்திகதி:** 2021 செத்தெம்பர் 14

**தொகை:** ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**தண்டப்பணம் விதிக்கப்பட்டதற்கான காரணம்:**

ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களது நுண்ணாய்வு நடவடிக்கை முறை தொடர்பில் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகளுடன் இணங்கியொழுகாமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

தலத்திலான பரீட்சிப்பின் போது, நிதியியல் உளவறிதல் பிரிவு ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு சேவைகளை வழங்கும் போது வாடிக்கையாளராக வரக்கூடியவர்களை நுண்ணாய்வு செய்வதற்கும் ஐக்கிய

நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் முழுமையான பட்டியலை இற்றைப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் தொடர்புகள் இடம்பெறவில்லை அல்லது தொடர்புறவில்லை என்பதை உறுதிசெய்யும் பொருட்டு ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தளத்தினை அல்லது ஏற்கனவேயுள்ள வியாபார தொடர்புகளைப் பரிசோதிப்பதற்கான ஏதேனும் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தவும் தவறியிருப்பதனை அவதானித்திருக்கிறது.

முறைமைகளிலும் நடவடிக்கை முறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் தலப் பரிசோதனையின் போது ஒறியண்ட் பினான்ஸ் பிஎல்சி குறித்துரைக்கப்பட்ட தனியாட்களுடனான அல்லது நிறுவனங்களுடனான வியாபாரத் தொடர்புகளின் சம்பவங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்பின்னர், இனங்காணப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்காக ஒறியண்ட் பினான்ஸ் பிஎல்சி நடவடிக்கையை எடுத்துள்ளதுடன் கம்பனியின் தீர்மானங்கள், நுண்ணாய்வுச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதன் மீது கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

**2. லங்கா கிறடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்**

**விதிப்புத்திகதி:** 2021 செத்தெம்பர் 14

**தொகை:** ரூ. 500,000.00 (ரூபா ஐந்து இலட்சம்)

**தண்டப்பணம் விதிக்கப்பட்டதற்கான காரணம்:**

ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களது நுண்ணாய்வு நடவடிக்கை முறை தொடர்பில் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகளுடன் இணங்கியொழுகாமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

தலத்திலான பரீட்சிப்பின் போது, நிதியியல் உளவறிதல் பிரிவு லங்கா கிறடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு சேவைகளை வழங்கும் போது வாடிக்கையாளராக வரக்கூடியவர்களை நுண்ணாய்வு செய்வதற்கும் 2012ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் கீழ் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கெதிராக குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் முழுமையான பட்டியலை இற்றைப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் தொடர்புகள் இடம்பெறவில்லை அல்லது தொடர்புறவில்லை என்பதை உறுதிசெய்யும் பொருட்டு ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தளத்தினை அல்லது ஏற்கனவேயுள்ள வியாபார தொடர்புகளைப் பரிசோதிப்பதற்கான ஏதேனும் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தவும் தவறியிருப்பதனை அவதானித்திருக்கிறது.

முறைமைகளிலும் நடவடிக்கை முறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் தலப் பரிசோதனையின் போது லங்கா கிறடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் குறித்துரைக்கப்பட்ட தனியாட்களுடனான அல்லது நிறுவனங்களுடனான வியாபாரத் தொடர்புகளின் சம்பவங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்பின்னர், இனங்காணப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்காக லங்கா கிறடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் நடவடிக்கையை எடுத்துள்ளது.